Raya




# சிறுவர் மலர்

## மலர் 1


RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE ; FRANCE



வால்ற் டிஸ்னி
புலுடோ
காதலின் மகிமை

# நோக்கு

சஞ்சீவி தமிழ்ச்சிறார்களுக்கான ஆக்க வேலையில் அவர்களுக்காகவே சிறுவர் இணைப்பு இதழ் ஒன்றினை வெளியிட்டுள்ளது. இங்கு வாழும் பெற்றோர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு தாய்மொழியினைக் கற்பிக்க வேண்டுமென்ற உங்கள் விருப்பத்திற்கு "சஞ்சீவியின் சிறுவர் மலர் ஒரு வழிகாட்டியாக அமையும் என நாம் நம்புகின்றோம். மேலும் சிறார்களின் மொழி வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான வேலைத் திட்டத்திற்கும் முடிந்தளவு, சிறார்கள் தமது மனதினை தாய் மொழியில் ஈடுபடுத்திக் கொள்ளக் கூடிய வகையில் சிறார்களின் கவிதை, கதை, சித்திரம் போன்ற விடயங்கள் இம்மலர் மூலம் வெளிக்கொணரப்படும். இது தவிர தமிழ் ஆசிரியர்கள், பெற்றோர்கள் விரும்பும் வேறு புதிய விடயங்களையும், மற்றும் குழந்தைகளின் மன எழுச்சியில் வரும் ஆக்கங்களையும் எமக்கு அனுப்பி வைத்தால் நாம் சிறுவர் மலரில் வெளியிடு செய்வதன் மூலம் சிறார்களின் சிந்தனையினைத் தூண்டி விடவும் தமிழை அவர்கள் விரும்பிக் கற்றுக் கொள்ளவும் இது ஒரு சிறு உதவியாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

இந்தச் சிறுவர் மலரினை வெளியிடுவதன் மூலம் சிறார்களுக்கான முழுமையான கல்வியினை கற்பித்து விட முடியாது. இதற்கு பெற்றோர்களினதும், தமிழ் ஆசிரியர்களினதும் முயற்சியே மிகவும் அவசியமானதாகும். பெற்றோர்களாகிய நீங்கள் சிறார்களுக்காக சிறு நேரத்தினையாவது ஒதுக்கி அவர்களுக்குப் படிப்பிப்பதோடு அவர்களைச் சிந்திக்கவும், செயற்படுத்தவும் செய்தல் வேண்டும்.

மேலும் இம்மலரானது தொடர்முறையாக பரீட்சார்த்தமாக வெளியீடாகும். இதில் பெற்றோர், ஆசிரியர், சிறார்கள் ஆகிய நீங்கள் எமக்கு கருத்துத் தெரிவித்தால் நாம் சிறந்த முறையில் சிறுவர் மலரினை வெளியிட இலகுவாக இருக்கும்.

— சஞ்சீவி —


காகம் கரைய குயில் கூவ
மல்லிகை மணம்பரப்ப
கதிரவன் வெளிவந்த - நேரம்
சரியாக காலை ஆறுமணி

பள்ளிக்கூடம் போய் பாடங்கள் படித்து
அப்பியாசம் பல செய்துமுடிய
கோயில் மணியடிக்கும் - நேரம்
சரியாகப் பகல் பன்னிரண்டு மணி

கடைக்காரன் கடையை மூட
பிள்ளைகள் விளையாடி வீடு திரும்ப
கதிரவன் செவ்வானம் சென்று மறையும் - நேரம்
சரியாக மாலை ஆறுமணி!

இவை எல்லாம் நம் நாட்டில்
எல்லாம் தலைகீழ் டென்மார்க்கில்!!!

- கயல்விழி யோகரட்னம்.
6ம் ஆண்டு தமிழ் (Holstebro)



S. Anusha
Fynsgade 1. 1 sc
Struer



P. KOhuLAN.
9 år
Baunevænget 15C
7600 STRUER

இங்கு உள்ள படங்களிற்கான தமிழ்ச்சொற்களைத் - தெரிந்து எழுதுங்கள்.


















# குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| * | * | ப 1 | 2 | து 3 | * | 4 | ல் 5 |
| * | அ 6 | 7 | பி 8 | ள் 9 | * | டு 10 | * |
| பு 11 | 12 | பா 13 | * | 14 | * | * | டை 15 |
| * | 16 | சி 17 | * | வி 18 | 19 | ழ 20 | 21 |
| க 22 | * | * | ர் 23 | 24 | * | * | மா 25 |
| 26 | சோ 27 | * | 28 | 29 | * | தா 30 | 31 |
| 32 | * | 33 | ண் 34 | டு 35 | * | 36 | க் 37 |
| பு 38 | 39 | 40 | க 41 | ம் 42 | * | ம் 43 | * |

*சிறார்களே!*

உங்களின் சிந்தனைக்காக இங்கு - குறுக்கெழுத்துப் போட்டி ஒன்றினை தந்துள்ளோம். இப்போட்டியானது சிறுவர் மலரில் தொடர்ந்து வரும். இதுபற்றிய உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதுங்கள். உங்கள் நல்ல கருத்துக்களை அறிந்து - எதிர் வரும் மலர்களிலிருந்து போட்டிக்கான பரிசில்களை சஞ்சீவி வழங்கும்.

1→3 இது உருண்டையான பொருள்.

4→5 இது மனித உறுப்புக்களில் ஒன்று.

6→9 இது ஒரு பழத்தின் பெயர்.

16→17 இது மாதம் ஒன்றின் பெயர்.

18→21 இது வார நாட்களில் ஒன்றாகும்.

30→31 இது வீதி அமைப்பதற்கு பாவிக்கப் படும் ஒரு பொருள்.

33→35 இது நீரிலும் நிலத்திலும் வாழும். நாம் இதனைக் கறி சமைத்துச் சாப்பிடுகிறோம்.

38→42 இதனைப் படிப்பதன் மூலம் பல விடயங்களை அறி-ந்து கொள்ளலாம்.

← 11, 12, 13 இது ஊர்வனவற்றில் ஒன்று. இவற்றில் சில கொடிய விஷம் கொண்டவை.

← 26, 27 நாம் பகலில் கூடுதலாக உண்ணும் உணவு.

22 ↓ 38 இது ஒரு நிறத்தின் பெயர்.

3 ↓ 42 மான் இப்படிச் செய்யும் எனக் கூறுவர்.


30 ↓ 43 கூடுதலான வெப்பத்தால் இது ஏற்படும்

23 ↑ 41 அழுதால் இது வரும்.


இவற்றை சரியாக எழுதினால் தாயின் மறு பெயர், இயற்கையோடு சம்பந்தப்பட்ட ஒன்று, ஒரு நாட்டின் பெயர் வெளிப்படும். அவற்றைக் கண்டு பிடியுங்கள்.

* * *



4 ÅR
DILANI
VICTOR
FARUM
4 ÅR


DHACi , hun. er. 7, år.
8.12.90


படத்திற்குரிய பெயர்களைச் சரியாக எழுதிக் கொள்ளுங்கள்.



ஆ____




____ன்.




ப ____ வை.




____லி.



ப____.




______ளை.




கங்___ரு.



சே___ல்.



மு___ல்.



வ____ணாத்திப்___ச்சி.

(தொடர்ச்சி பக்கம் 18.)

# உங்கள் திறமைக்கு



ஓர் அரச சபையினில் அமர்ந்திருந்த புலவன் ஒருவனது அறிவைப் பரீட்சித்துப் பார்க்க எண்ணிய அரசன் புலவனை திடீரென அழைத்து ஒரு எலியினை புலவனிடத்தில் கொடுத்த இந்த எலியை நீ எப்படிக் கொல்கிறாயோ அதே பாணியில் நான் உன்னை நிட்சயமாகக் கொல்லுவேன் என்று உறுதியாக, இறுதியாக கூறினான்.

**கேள்வி:**

புலவன் அந்த எலியை கட்டாயமாக கொல்ல வேண்டும். அதே போல் அரசனும் கட்டாயம் புலவனைக் கொல்லுவான். ஆகவே எப்படி அந்த எலியை புலவன் கொன்று தானும் உயிர் தப்பி தனது அறிவையும் சபையோருக்கு காட்டியிருப்பான்.

அன்புச் சிறுவர்களே!

இந்தக் கேள்விக்கு சரியான விடை அனுப்பும் அதிஷ்ட சிறுவன் அல்லது சிறுமிக்கு சஞ்சீவி சார்பில் பாரூமினைச் (FARUM) சேர்ந்த இரா. கருணாகரன் விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய சிறுவர் பரிசுப் பார்சல் ஒன்றினை அனுப்பி வைப்பார்.

ஆதிகாலத்து மனிதன் பேசும் திறமை பெற்றபின், பல நூறு ஆண்டுகளின் பின்பே, தாம் பேசும் மொழியை சித்திர வடிவில் உருவம் அமைத்தான். அந்த சித்திரவடிவில் அமைந்த மொழியானது, காலப் போக்கில் பல தடவை மாற்றமடைந்து; சுகமாக எழுதும் வடிவத்தில் அமைந்தது. தற்போதும் நாம் எழுதிவரும் தமிழ் எழுத்தில், சீர்திருத்தம் - செய்யப்பட்டுள்ளது. அவையாவன:


| பழைய உருவம்: | புதிய உருவம்: |
|---|---|
| ணா | ணா |
| ணொ | ணொ |
| ணோ | ணோ |
| ணை | ணை |
| லை | லை |
| ளை | ளை |
| றா | றா |
| றொ | றொ |
| றோ | றோ |
| னா | னா |
| னை | னை |
| னொ | னொ |
| னோ | னோ |



ஒருவர் நகரத்தின் உயரமான மணிக்-
கோபுரத்தின் மேல் நின்று, நிலத்தைப்பார்த்தார். அவரது பார்வையில், நிலத்தில் நின்ற ஒரு பெண் மிகவும் சிறியவளாகக் காணப்பட்டாள். பின்பு அம்மனிதன் கோபுரத்திலிருந்து கீழே இறங்கி தெருவுக்கு வந்தார். தெருவில் அந்தப் பெண் - நிற்பதைக்கண்டதும், வணக்கம் பெண்ணே என்றார். ஆச்சரியத்துடன் அவரைப்பார்த்த-
பெண், என்னை எவ்வாறு உடக்குத் தெரியும் எனக்கேட்டார். அதற்கு அம்மனிதன், நீ சிறியவளாய் இருந்தபோதிலிருந்தே எனக்கு உன்னைத் தெரியும் என்றார்.

- செ. சங்கீதா. 7ம் ஆண்டு தமிழ் (Hokkebro)


குழந்தைகளே ஒரு ஒளியின் முன் நின்று
ஒரு திரையிலோ அல்லது ஒரு சுவரிலோ
நிழல் விழும்படியாக, படத்தில் இருப்பது
போல் கைகளை அமைத்து இந்த உருவத்-
-தைக் கண்டு பிடியுங்கள்.



# நீங்களும் செய்து பாருங்கள்....




___று



___ரம்.



கு___ம்



___லை



குருவிக்___டு.

இங்குள்ள இலக்கங்களினை ஒழுங்குமுறையில் - தொட்டுச் செல்லும்படி கோடு கீறினால், அந்த - அழகிய படம் வெளிவரும்



"CHANCHIVE"
Postbox:1205
7500 Holstebro
Danmark.